செ.வெ.எண்: 491 **பத்திரிக்கைக் குறிப்பு** நாள்: 28.7.11

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு.அக்ரி. எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இன்று (28.07.2011) காலை புழல் வெளிவழி தணிக்கைச் சாவடி மற்றும் பெத்திக்குப்பம் உள்வழி தணிக்கைச் சாவடிகளில் திடீர் சோதனை செய்து, தணிக்கைச் சாவடி பணிகளை ஆய்வு செய்தார்.

இத்தணிக்கைச் சாவடிகளில் நிறுத்தி ஆய்வு செய்யப்படும் சரக்கு வாகனங்களுக்கு உரிய விற்பனைப் பட்டியல் மற்றும் டெலிவரி தாள்கள் முறையாக தணிக்கை செய்யப்பட்டு உரிய பதிவுகள் மேற்கொள்ளப்படுகிறதா? என ஆய்வு செய்தார்கள். மேற்படி ஆவணங்கள் கணிணியில் வணிகரின் விவரங்களுடன் சரிபார்க்கப்பட்டு, உரிய பதிவுகள் மேற்கொள்வதையும், தணிக்கையிடப்படும் சரக்கு வாகனங்களில் உள்ள பொருளின் மதிப்பு மற்றும், அதற்குரிய வரி செலுத்தப்பட்டுள்ளதா எனவும், அவ்வாறு உரிய வரி செலுத்தவில்லையென்றால் விதிக்கப்படும் அபராதத் தொகை விவரங்களையும் ஆய்வு செய்தார்.

இத்தணிக்கைச் சாவடிகளில் பணியாற்றும் பணியாளர்களின் வருகைப் பதிவேடு, பணியாளர்களின் அலுவல்கள், அபராத ரசீது புத்தகங்கள் மற்றும் பராமரிக்கப்படும் அனைத்து ஆவணங்களையும் ஆய்வு செய்தார். அலுவலர்களின் பணிநேரம் மற்றும் அவர்களது பணி குறித்து கேட்டறிந்ததுடன் அவர்களது குறைகளையும் கேட்டறிந்தார்.

சரக்கு வாகனங்களை தணிக்கையிடும் போது பயன்படுத்தப்படும் ஆவணங்களை ஆய்வு செய்வதுடன், வாகன சோதனையின் போது தவறுகள் ஏதும் நடைபெறாமல் இருக்க மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளையும், வழிமுறைகளையும் நன்கு செயல்படுத்த வேண்டும் என அறிவுறுத்தினார். வணிகவரித்துறையால் கடந்த ஆண்டு ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் ரூ.7260.83 கோடி வரி வசூலிக்கப்பட்டது. இந்த ஆண்டு கடந்த மூன்று மாதங்களில் ரூ.8720.53 கோடி வரி வசூலிக்கப்பட்டுள்ளது. இது 20 விழுக்காடு அதிகமாகும். இது போன்று சிறப்பாக பணியாற்றி, தணிக்கைச் சாவடி அலுவலர்கள் பணிநேரம் முழுவதும் கவனமாக ஆவணங்களை பரிசீலனை செய்து அரசுக்கு உரிய வருவாயை ஈட்டித் தருமாறு அறிவுறுத்தினார்.

..2.

மேலும் தணிக்கைக்காக நிறுத்தப்பட்ட வாகனங்களின் ஓட்டுநர்களிடம் அவர்களது தேவைகள் குறித்து கேட்டறிந்தார். அவர்கள் தணிக்கைச் சாவடியில் வாகனங்களை நிறுத்துவதற்கு போதுமான இடமும், சரக்கு நிறுத்தம் செய்யப்பட்ட வாகனங்களின் ஓட்டுநர் மற்றும் பணியாளர் உபயோகத்திற்கு குளியல் அறை மற்றும் கழிப்பறை தேவைப்படுவதாக தெரிவித்தார்கள். அவற்றை உடனடியாக பரிசீலித்து ஆவன செய்யுமாறு உயர் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். பின்னர் சரக்கு வாகனத்தை நிறுத்தி, அவ்வாகனத்திலுள்ள சரக்கு விவரங்களையும், உரிய படிவங்களையும் ஆய்வு செய்தார்.

பின்னர் தணிக்கைச் சாவடியில் நிற்காத வாகனங்கள் குறித்து கேட்டறிந்தார். தணிக்கைச் சாவடியில் நிற்காத வாகனங்களை சுற்றும் குழு அலுவலர்களால் நிறுத்தப்பட்டு அதற்கான தண்டத் தொகை விதிக்கப்படுவதை **புதுவாயல் அருகில்** கேட்டறிந்து, அதற்குரிய ஆவணங்களையும் ஆய்வு செய்தார்.

தணிக்கைச் சாவடியின் கட்டமைப்பினை மேம்படுத்த விரிவான ஏற்பாடுகள் செய்யுமாறு வணிகவரித் துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டதுடன் தமிழகத்திலுள்ள 28 தணிக்கைச் சாவடிகளில் மாநில எல்லைகளில் உள்ள முக்கியமான 8 தணிக்கைச் சாவடிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் மேம்படுத்தப்படும் என்று மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின் போது வணிகவரித்துறையின் அரசு முதன்மைச் செயலர் திரு.சுனீல் பாலிவால், இ.ஆ.ப., முதன்மைச் செயலர் மற்றும் வணிகவரி ஆணையர் திரு.ஹேமந்த் குமார் சின்ஹா, இ.ஆ.ப., இணை ஆணையர் (செயலாக்கம்) திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., துணை ஆணையர் திரு.சுபாஷ் சந்திரபோஸ் மற்றும் உதவி ஆணையர் திரு விஸ்வநாதன் ஆகியோர் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.